*2005 ஏப்ரல் 4]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 05–04–2005 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"*

*என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.*

*நாளை (05–04–2005) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (05–04–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 1–54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*90. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 19–8–2004 ஆம் நாளிட்ட 140 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருட்கள் கொண்டு வருவதற்கான நுழைவு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]*

*91. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் யாதொரு வெளிநாட்டிற்கும் கடல் பயணம் மேற்கொள்கின்ற வெளிநாட்டைச் சேர்ந்த கப்பல்களுக்குப் பயன்படுத்துவதற்காக உயர்வேக டீசல் எண்ணெய், மிதவேக டீசல் எண்ணெய், உலைகள எண்ணெய் ஆகியவற்றின் விற்பனைமீது அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆறு எண்ணெய் நிறுவனங்கள் மேற்சொன்ன சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரி வீதத்தை அறிவிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் கொள்முதல் செய்வோரிடமிருந்து உறுதிமொழி ஒன்றை வணிகர் பெற்று அளிக்க வேண்டும் என்கிற நிபந்தனைக்கு உட்பட்டு வரிவீதத்தை குறைத்து வணிக வரிகள் (பி–2) துறையின் 29–12–2004 ஆம் நாளிட்ட 199 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]*

*92. 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970)–ன்கீழ் (i) திருவாளர்கள் டி.வி.எஸ். மோட்டார் கம்பெனி லிமிடெட், சென்னை, அவர்களால் இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மோட்டார் சைக்கிள், (ii) திருவாளர்கள் டிராக்டர்ஸ் அண்டு பார்ம் எக்யூப்மெண்ட்ஸ் லிமிடெட், சென்னை அவர்களால் இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற டிராக்டர்கள் மற்றும் (iii) திருவாளர்கள் டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை அவர்களால் இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற சைக்கிள் ஆகியவற்றின் விற்பனை தொடர்பான வரி விதிக்கத்தக்க விற்றுமுதல்மீது செலுத்தத்தக்க கூடுதல் விற்பனை வரியை விலக்களித்தது குறித்து வணிக வரிகள் (பி2) துறையின் 29–12–2004 ஆம் நாளிட்ட 200 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]*

*93. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டத்தின்கீழ் தங்கம், வெள்ளி, பிளாட்டினம் நகைகள், விலைமதிப்புள்ள கற்கள் ஆகியவற்றை விற்பனை செய்யும் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரித் துறையின் 29–12–2004 ஆம் நாளிட்ட 201 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு ஆடம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]*